இருக்கிறது. ஏற்கனவே, 1960—61-லிருந்த ஆசிரியர்களைவிட தற்போது இருக்கிற ஆசிரியர்களுக்கு அதிகமான பிரச்னைகள் இருக்கிற காரணத்தினால் மீண்டும் பரிசீலனை செய்து அரசு ஆத்தூர் தாலுகாவில் கல்வி மாவட்டத்தை உருவாக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கும் தணிக்கை குறித்து அவர்களுக்குள்ள வேலைப் பளுவுக்கும் தொடர்பு இருப்பதாக நான் கருதவில்லை. ஆத்தூர் மாவட்டத்திற்கென தனியாக ஒரு மாவட்டம் அமைக்க வேண்டு மானால், தமிழகத்திலே ஒவ்வொரு பகுதியிலும் அதுபோன்ற பிரச்னைகள் எழுந்து, இன்னும் அதிகமான செலவு அரசுக்கு ஏற்படும். நிதிநிலைமையை ஒட்டித்தான் இதுபோன்ற நடவடிக் கைகளை எடுக்க முடியும்.

உத்திரமேரூரில் துணை நீதிமன்றம்.

176—(*வினா எண் 9844) திரு. க. நரசிம்மபல்லவன் : மாண் மிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூரில் துணை நீதிமன்றம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

இலவச சட்ட உதவி வழங்கும் திட்டம்.

177-(*வினா எண் 11224)—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இலவச சட்ட உதவி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியம் எத்தனை இடங்களில் மத்தியஸ்த மையம் அமைத்துள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியத்தின் கீழ் 16 மத்தியஸ்த மையங்கள் இயங்கி வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத்தலைவர் அவர்களே, மேலும் எத்தனை மையங்களை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Mediation centres என்று சொல்லக்கூடிய இந்த மத்தியஸ்தம் செய்து சமாதான முறையில் தீர்த்து வைக்கும் மையங்கள், நீதிமன்றங்களுக்குள் உள்ள வழக்குகளாக இருந்தாலும் சரி, நீதிமன்றங்களுக்குச் செல்லவேண்டிய பிரச்னைகளாக இருந்தாலும் சரி settlement out of court என்ற முறையிலே தீர்வினைக் காணபதற்காக ஒவ்வொரு வட்ட அளவிலும் இந்த mediation centres அமைக்க வேண்டுமென்பது அரசினுடைய நோக்கம். அந்த அடிப்படையில் தற்போது அதிகப்படியான நிதியைக் கூட இந்தியத் துணைக் கண்டத்தில், தமிழகத்தில்தான் ரூ. 38 இலட்சம் அளவுக்கு, ஒதுக்கி இருக்கிறோம். இந்த ஆண்டு ரூ. 40 இலட்சமாகக் கூட உயர்த்தி இருக்கிறோம். படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை, எளியவர்களுக்கு விரைவில் உதவியைப் பெற்றுத் தருகிற இந்த மையங்களை நடத்துவதற்காக மத்திய அரசு ஏதாவது உதவியைச் செய்து வருகின்றதா? அதோடு நீதிமன்றத்திலேயே கிடைக்கிற இடத்தில்தான் இந்த மையங்களை நடத்த வேண்டியிருக்கிறது. இதற்கென்று சிறிய கட்டிடத்தை யாவது நீதிமன்ற வளாகத்திற்குள் கட்டித் தருகின்ற முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசினுடைய நிதி உதவி இதற்கு இல்லை. மாநில அரசினுடைய பொருளாதாரத்தைக் கொண்டு தான் இதை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இட வசதியைப் பொறுத்தவரைக்கும் தற்போது இந்தப் பிரச்சனை உயர்நீதி மன்றத்தால் அரசுக்குத் தெரிவிக்கப்படவில்லை, பிரச்னை இருக்கும் என்றுகூட அரசு கருதவில்லை அப்படி இருந்தால் அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச சட்ட உதவி மையங்கள் தமிழகத்தில் செயல் படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த, எந்த மாவட்டங்களில் செயல்படுகின்றன? அனைத்து மாவட்டங் களுக்கும் அது விரிவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16 மாவட்டங்களில் அல்ல; 16 mediation centres என்று சொன்னேன். 16 இடங்களிலே செயல்படுகின்றன. செங்கை மாவட்டத்திலே திருப்போரூரில், காஞ்சிபுரத்திலே உத்திர மேரூர் பகுதியில், காஞ்சிபுரம் தாலுகாவில் வாலாஜா பாத்தில், திருவள்ளூர் தாலுகாவில் கடம்பத்தூரில், குன்னூர் தாலுகாவில் கோத்தகிரியில், பூந்தமல்லியில் ஸ்ரீபெரும்புதூரில், திருப்பத்தூரில் கீழ்சிவல்பட்டியில், மதுராந்தகத்தில் சித்தனூர், அண்ணா மாவட்டத்தில் காடம்பாறையில், கடலூரில் தங்களூர்,

நீலகிரியில் மஞ்சூரில், பழனியில் சத்திரம்பட்டியில், காரைக் குடியில் கல்லன், ஜெயங்கொண்டானில் ஆண்டிமடம், தென்னாற் காட்டில் குறிஞ்சிப்பாடி, கள்ளக்குறிச்சியிலே கல்வராயன் மலை ஆகிய இடங்களில் அவை செயல்படுகின்றன.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இலவச சட்ட உதவி வழங்கும் மையங் களின் மூலம் 1985–86-ல் எத்தனை வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டன ? அதில் எத்தனை பைசல் செய்யப்பட்டன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக 91,937 மனுக்கள் பெறப்பட்டன. அவற்றில் பல கட்டங்களில் பல தீர்க்கப்பட்டி ருக்கின்றன. அதிகாரிகள் மூலமாக 87 ஆயிரத்து சொச்சம், சட்ட உதவிக் குழுவின் முயற்சியால் உடன்பாடு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 4,141—அதாவது இந்த மீடியேஷன் சென்டர்ஸ் மூலமாக, mediation centres—negotiation and settlement out of court. என்ற முறையில் அவை தீர்த்து வைக்கப்பட்டன. அதைப்போலவே கருத்து வேறுபாடுகள் உள்ள வழக்குகளிலே 1,418 வழக்குகள் Settlement out of court மூலம் தீர்த்து வைக்கப் பட்டிருக்கின்றன. நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்கள் ஆகியவற்றில் இன்னும் நிலுவையாக 24,421 வழக்குகள் இருக்கின்றன. நீதி மன்றத்திலேயே சட்ட ஆலோசனைக் கமிஷன் தலையிட்டு 77,956 வழக்குகளைத் தீர்த்து வைத்திருக்கிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலவச சட்ட உதவி என்பது ஏழை களாக இருப்பவர்கள், எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் அவர்கள் வழக்கு மன்றங்களிலே இழுக்கப்படுவதால்தான் அவர் களுக்கு வசதியில்லை என்ற அடிப்படையில் இந்த உதவிகளைத் தமிழக அரசு செய்திருக்கிறது. இது நல்லதொரு சிறந்த திட்டம் என்பதால் அதே சமயத்தில் இருபதம்சத் திட்டத் திலே இது இல்லை என்றாலும், அதிலேகூட சேர்க்கப்பட வேண்டிய ஒரு நல்ல முக்கியமான திட்டமாக இருக்கின்ற காரணத்தினால் மத்திய அரசிடம் வலியுறுத்தி அதற்கான நிதி உதவியைப் பெறுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசிடம் இதுகுறித்து நிதியை மாநில அரசு கேட்டுத்தான் வருகிறது. தொடர்ந்து வலியுறுத்து வோம்.